பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 11 2024 **SUNDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளைஞர்கள் இடையே தலைமைப்பண்பு மற்றும் சேவை உணர்வை ஏற்படுத்துவதில் தேசிய மாணவர் படை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாடாளுமன்றத்தில் எந்தவொரு விவகாரம் குறித்தும் விவாதிக்க அரசு தயாராக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

3. கிராமப்புற முன்னேற்றத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, நாளை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 12 ரன் எடுத்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

**<<<<<>>>>>>**

இளைஞர்கள் இடையே தலைமைப்பண்பு மற்றும் சேவை உணர்வை ஏற்படுத்துவதில் தேசிய மாணவர் படை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதனை தெரிவித்தார்.

*<u>(வாய்ஸ் பைட் - பிரதமர் (1) - 60 செகண்ட்ஸ்)</u>*

விவேகானந்தரின் 162-ஆவது பிறந்த தினத்தையொட்டி, வரும் ஜனவரி மாதம் தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இளைஞர்கள் தங்களது சிந்தனைகளை வெளிப்படுத்தும் வகையில் மகா கும்பமேளா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதில் இளைஞர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

மூத்த குடிமக்களிடையே இணையதள மோசடிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

*<u>(வாய்ஸ் பைட் - பிரதமர் (2) - 27 செகண்ட்ஸ்)</u>*

குழந்தைகளின் படைப்பாற்றலை அதிகரிக்க செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

*<u>(வாய்ஸ் பைட் - பிரதமர் (3) - 48 செகண்ட்ஸ்)</u>*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்று இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தில் எந்தவொரு விவகாரம் குறித்தும் விவாதிக்க அரசு தயாராக உள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்றத்தில் அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறுவதை எதிர்க்கட்சிகள் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

கிராமப்புற முன்னேற்றத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநில நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று தொடங்கிவைத்து பேசினார்.

அனைத்து மக்களும் பயனடையும் வகையில், திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

புதிய தொழில்நுட்பத்தின் மூலம் மனித – வன விலங்கு மோதல்களுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவில் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் மீண்டும் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சாலை சீரமைப்புப்பணிகளை மாநில அரசு விரைவுபடுத்த வேண்டும் என்று திருமதி வானதி சீனிவாசன் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

யானைகளை புத்துணர்வு முகாமிற்கு அனுப்புவது குறித்து கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும் என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூரில் கோவில் யானை தாக்கி உயிரிழந்த இரண்டு பேரின் குடும்பத்திற்கு தலா 10 லட்சம் ரூபாய் நிதியுதவியை அமைச்சர் வழங்கினார்.

பின்னர் அங்கிருந்த பணியாளர்கள் வனத்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளிடம் இதுதொடர்பான விவரங்களை கேட்டறிந்தார்.

இதனையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், 26 கோவில்களில் யானைகள் பராமரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பக்தர்கள் மற்றும் பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் அனைத்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் திரு சேகர்பாபு தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர், அடுத்த இரு தினங்களில் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 49 செகண்ட்ஸ்)*

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

ராபி பருவத்தில் பயிரிடப்படும் சின்ன வெங்காயம் பயிருக்கு இம்மாதம் 30-ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து விவசாயிகள் பயனடையலாம் என்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

--------------

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், ராமேஸ்வரம் ஆகிய பகுதிகளில் தொடர் மழை காரணமாக தேங்கியுள்ள மழை நீரை விரைவாக அகற்றிட நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அம்மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அறிவுறுத்தியுள்ளார்.

----------------

தேசிய மாணவர் படை தினத்தையொட்டி, சென்னையில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில் ராணுவத்தின் தென்பகுதி தளபதி லெப்டினன்ட் ஜென்ரல் கரண்பீர்சிங் பிரார், மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

----------------

சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்ட ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஆஸ்திரேலியா அணி தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 12 ரன் எடுத்துள்ளது.

**Perth**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாவது நாளான இன்று, தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இந்தியா ஆறு விக்கெட் இழப்பிற்கு 487 ரன் எடுத்திருந்த நிலையில், ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

விராட் கோலி அபாரமாக ஆடி சதம் அடித்தார்.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 150 ரன்னுக்கும், ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 104 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன.

-----------

சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** பட்டம் வென்றார்.

மும்பையில் இன்று நடைபெற்ற மகளிர் பிரிவு இறுதிப்போட்டியில் அவர், 11-4, 11-3, 11-1 என்ற நேர் செட் கணக்கில், சக வீராங்கனையான **Shameena Riaz**-ஐ வென்றார்.

----------------

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி மஸ்கட் சென்றடைந்தது.

இப்போட்டி, நாளை மறுநாள் தொடங்குகிறது.

இந்தியா முதல் போட்டியில் வரும் புதன்கிழமை தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

<<<<<END>>>>>>